# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்

**முன்னிலை :- திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L., LLM.,D.JJJ.Psy.,**

**2026** ஆம் ஆண்டு **மார்ச்** மாதம் **16**ஆம் நாள் **திங்கள்கிழமை**

**கருங்கல் காவல் நிலைய குற்ற எண் 77/2026**

இல்

குற்றவியல் பல் வகை மனு எண் 195/2026 (Crl.M.P)

| | | |
|---|---|---|
| தினேஷ் (வயது 41/2026)<br>த/பெ. மணி<br>குழித்துறை | | ............ 1ம் மனுதாரர் /1ம் குற்றம் சுமத்தப்பட்டநபர் |
| பிரிஜித் (வயது 28/2026)<br>த/பெ. பாலூஸ்<br>குழித்துறை | | ............ 2ம் மனுதாரர் /2ம் குற்றம் சுமத்தப்பட்டநபர் |
| சக்திவேல் (வயது 23/2026)<br>த/பெ. மாடசாமி<br>ஆலன்குளம், தென்காசி | | ............ 3ம் மனுதாரர் /3ம் குற்றம் சுமத்தப்பட்டநபர் |
| | //எதிர்// | |
| அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>**கருங்கல்** காவல் நிலையம்,<br>**அடைப்புக்காவல் நாள்– 09.03.2026**<br>**பாரதீய நியய சன்கீதா பிரிவுகள் 296(b), 115(2), 118(1) மற்றும் 351(3)ன் கீழ்** | | ........எதிர்மனுதாரர்/ குற்றமுறையிடுபவர் |

இம்மனு **11.03.2026 ஆம்** தேதியில் பிரிவு 480 பாரதிய நாகரிக் சுரக் ஷா சன்கீதான்படி மனு தாக்கல் செய்யப்பட்டு இன்று என் முன் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு இவ்வழக்கில் மனுதாரர்கள்/ குற்றம் சுமத்தபட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. P.சதீஷ்குமார்** ஆஜராகியும் எதிர்மனுதாரர்/ குற்றமுறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை I அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை ஆராய்ந்தும், இன்று **16.03.2026** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## உத்தரவு

மனுதாரர்கள் பிரிவு 480 பாரதிய நாகரிக் சுரக் ஷா சன்கீதான்படி பிணைக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இம்மனுவில், **கருங்கல் காவல் நிலைய குற்ற எண் 77/2026 பாரதீய நியய சன்கீதா பிரிவுகள் 296(b), 115(2), 118(1) மற்றும் 351(3)ன் கீழ்** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/ குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கடந்த **09.03.2026** முதல் நீதிமன்றக்காவலில் இருந்து வருகிறார்கள்.

மனுதாரர்கள் /குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் மேற்படி நபர்கள் எந்தவொரு விதத்திலும் குற்றவாளிகள் இல்லை என்றும், மரியாதைக்குரிய குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றும், நிரந்தர வசிப்பிடத்தை சேர்ந்தவர்கள் என்றும், நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவார்கள் என்றும், வழக்கு விசாரணைக்காலத்தில் தவறாமல் முன்னிலையாவதாகவும் மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.16 19:18:47 +0530

எதிர்மனுதாரர் / குற்றமுறையிடுபவர் தரப்பில் ***"மனுதாரர்கள் 07.03.2026 ஆம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் கருங்கல் டயானா பாரில் வைத்து புகார்தாரரான அகிலை கெட்ட வார்த்தைகள் பேசி, கம்பியால் தாக்கி, கொலைமிரட்டல் விடுத்ததாக புகார்"***

இம்மனு குறித்து எதிர்மனுதாரர் தரப்பு/ கற்றறிந்த அரசுத்தரப்பில் வழக்கு புலன் விசாரணையில் இருப்பதாலும், சாட்சிகளை கலைத்துவிட வாய்ப்பு உள்ளது என்பதாலும், இதுபோன்ற குற்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபட வாய்ப்பு உள்ளதாலும், வழக்கின் புலன்விசாரணை முடியாமல் இருப்பதாலும், வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக சென்றுவிட வாய்ப்பு உள்ளது என்பதாலும், மனுதாரர்களை பிணையில் விட கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள்/குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு அடிப்படை தோற்ற முகாந்தரம் இருப்பதாலும், காயம்பட்ட நபர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்பதாலும், வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை கருத்தில் கொள்கையில் பிணை வழங்க ஏற்ற சூழ்நிலை ஏற்படவில்லை என்பதால் இந்த பிணை விடுவிப்பு செய்ய கோரும் மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு (16.03.2026)ம் தேதி அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.16 19:18:53 +0530

நீதித்துறை நடுவர்
இரணியல்

Judicial Magistrate Court,
Eraniel

Court Seal

"The Parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date."